




தீரன் மு.சின்னச்சாமி அவர்களின் 47 வது நினைவு நாளை முன்னிட்டு ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வெள்ளபெத்தாம்பாளையத்தில் உள்ள தீரன் மு.சின்னசாமி நினைவிடத்தில் கழக துணை பொதுச்செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு தலைமையில் ஈரோடு தெற்கு மாவட்டக் கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி மாலை அணிவித்து, மலர்தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் கழக நெசவாளரணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வி.சி.சந்திரகுமார், மாவட்ட கழக துணை செயலாளர் ஆ.செந்தில்குமார், மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிச்சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, துணை மேயர் வே.செல்வராஜ் , மண்டல குழு தலைவர்கள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### இணைய தளங்களில் தவறாக வழிநடத்தும்

# மருத்துவ சிகிச்சை விளம்பரங்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?

## மக்களவையில் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 3 -

திராவிட முன்னேற்றக் கழக, அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர், டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள், நேற்று முன்தினம் மக்களவையில், மருந்துகள் மற்றும் மாயச் சிகிச்சைகள் (ஆட்சேபனைக்குரிய விளம்பரங்கள் சட்டம், 1954ன் விதிகளைப் பெரிய தொழில்நுட்ப நிறு வனங்கள் மற்றும் இணையவழி இடைநிலைச் சேவை வழங்குநர்கள் முறையாகப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள், இணையத் தளங்களில் தவறாக வழிநடத்தும் மருத்துவ மற்றும் சிகிச்சை தொடர்பான விளம்பரங்களைத் தடுப்பதற்கான முயற்சிகள், இணையச் சூழலில் இச்சட்டத்தை அமல்படுத்தும் ஏற்பாடுகள், இணைய சேவை வழங்குநர்கள் மற்றும் விளம்பர தாரர்களின் பொறுப்புணர்வை வலுப்படுத்த பொதுமக்களை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தவறான மருத்துவக் கோரி க்கைகளிலிருந்து பாது காப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேள்வி எழுப்பினார்.

இதற்கு ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணை அமைச்சர் திருமதி அனுப்ரியா பட்டேல் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:

மருந்துகள் தொடர்பான விளம்பரங்கள் மருந்துகள் மற்றும் மாயச் சிகிச்சைகள் (ஆட்சேபனைக்குரிய விளம்பரங்கள்) சட்டம், 1954ன் கீழ் ஒழுங்குபடுத்தப்படுகின்றன என்றும், இச்சட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பு மாநில அரசுகளிடம் உள்ளது என்றும் அமைச்சர் தெரிவித்தார். மேலும், மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிமுறைகள், 1945ல் 2015ஆம் ஆண்டு செய்யப்பட்ட திருத்தத்தின்படி, அட்டவணை H, அட்டவணை H1 மற்றும் அட்டவணை Xஇல் இடம்பெறும் மருத்துவரின் பரிந்துரையுடன் மட்டுமே வழங்கப்படும் மருந்துகள் தொடர்பான விளம்பரங்களை, ஒன்றிய அரசின் முன் அனுமதி பெறாமல் வெளியிடக் கூடாது என்ற விதி கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் கூறினார்.



இவ்விதிமுறைகளை மீறும் சம்பவங்களில் நடவடிக்கை எடுக்க மாநில மருந்து உரிமம் வழங்கப்பட்டுள்ளதாக வழங்கும் அதிகாரிகளுக்கு அதிகாரம் அமைச்சர் அமைச்சர் தெரிவித்தார். மேலும், தவறாக

வழிநடத்தும் விளம்பரங்கள் தொடர்பான புகார்கள் மத்திய மருந்துகள் தரக் கட்டுப்பாட்டு அமைப்பிற்கு கிடைக்கும் போதெல்லாம், அவை உரிய நடவடிக்கை எடுப்பதற்காக சம்பந்தப்பட்ட மாநில மருந்து உரிமம் வழங்கும் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதாகவும் கூறினார்.

**பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது!**

இணையம் மற்றும் தொலைக்காட்சி வழியாக ஒளிபரப்பப்படும் விளம்பரங்கள் தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்குமுறை அமைப்பின்படி, தனியார் செயற்கைக்கோள் தொலைக்காட்சி அலைவரிசைகளில் ஒளிபரப்பப்படும் அனைத்து விளம்பரங்களும் கேபிள் தொலைக்காட்சி வலையமைப்புகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1995 மற்றும் அதன்கீழ் இயற்றப்பட்ட விதிமுறைகளில் இடம்பெற்றுள்ள விளம்பர நெறிமுறைகளை கட்டாயமாகப் பின்பற்ற வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார். மேலும், விளம்பர நெறிமுறைகளின் விதி 7(5) ன் படி, ஒரு பொருளுக்கோ அல்லது அதன் உட்பொருட்களுக்கோ அறிவியல் ரீதியாக நிரூபிக்க முடியாத விசேஷ, அற்புத அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட குணங்கள் இருப்பதாக பொதுமக்கள் கருதும் வகையிலான விளம்பர ங்கள் வெளியிடப்படக் கூடாது என்றும் கூறினார். இவ்விதிகளை மீறும் தனியார் தொலைக்காட்சி அலைவரிசைகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும், விளம்பர நெறிமுறைகளை முறையாகப் பின்பற்றுவதை உறுதி செய்வதற்காக ஒன்றிய அரசின் தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம் அவ்வப்போது ஒளிபரப்பாளர்களுக்கு அறிவுரைகளையும் வெளியிட்டு வருவதாகவும் அமைச்சர் தெரி வித்தார்.

மேலும், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019ன் 10ஆவது பிரிவின் கீழ் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், நுகர்வோ ரின் உரிமைகள் மீறப்படு தல், நியாயமற்ற வணிக நடைமுறைகள் மற்றும் தவறான அல்லது தவறாக வழிநடத்தும் விளம்பரங்கள் தொடர்பான விவகாரங்களை ஒழுங்குபடுத்துவதுடன், நுகர்வோரின் உரிமைகளைப் பாதுகாத்து அமல்படுத்தும் பொறுப்பும் அந்தஆணையத்திற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**அரசு நடவடிக்கை எடுத்துள்ளது!**

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 201960T 18 ஆவது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம், தவறாக வழிநடத்தும் விளம்பரங்களைத் தடுப்பதற்கான மற்றும் அவ்வகை விளம்பரங்களுக்கு அளிக்கப்படும் பரிந்துரைகள் தொடர்பான வழிகாட்டுதல்கள், வெளியிட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வழி காட்டுதல்களில், தவறாக வழிநடத்தாத மற்றும் செல்லத்தக்க விளம்பரங்களுக்கான நிபந்தனைகள், கவர்ச்சிகரமான சலுகை விளம்பரங் கள், மாற்று விளம்பரங்களுக்கு விதிக்கப்பட்டுள்ளதடை, குழந்தைகளை இலக்காகக் கொண்ட விளம்பரங் கள், விளம்பரங்களில் இடம்பெற வேண்டிய மறுப்புரை மற்றும் உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் விளம்பர முகமைகள் பின்பற்ற வேண்டிய பொறுப்புகள் குறித்து விரிவாக வகுத்து வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இவ்வாறு, மருந்துகள் மற்றும் மாயச் சிகிச்சைகள் (ஆட்சேபனைக்குரிய விளம்பரங்கள்) சட்டம், 1954, மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிமுறைகள், 1945, கேபிள் தொலைக்காட்சி வலையமைப்புகள் (ஒழுங்குமுறை) சட்டம், 1995 மற்றும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 2019 ஆகியவற்றின் வாயிலாக தவறான மற்றும் ஆதாரமற்ற மருத்துவ விளம்பர ங்களைத் தடுக்கவும், நுகர்வோரின் நலன்களைப் பாதுகாக்கவும் ஒன்றிய அரசு பல்வேறு நட வடிக்கைகளை தொட ர்ந்து மேற்கொண்டு வருவதாக, ஒன்றிய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை இணை அமைச்சர் திருமதி அனுப்ரியா பட்டேல் அவர்கள், தி.மு.க. அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு எழுத்து ப்பூர்வமாக அளித்த பதிலில் தெரிவித்துள்ளார்.

### ஆயுஷ் நிறுவனங்கள் விரிவாக்கம் குறித்த விளக்கம் இல்லை!

# தமிழ்நாட்டின் எதிர்பார்ப்புகளுக்கு உரிய பதில் இல்லை!

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஆக. 3 -

ஆயுஷ் நிறுவனங்கள் விரிவாக்கம் குறித்து தெளிவான செயல்திட்டத்தை வெளியிடத் தவறிய ஒன்றிய அரசு எனவும் தமிழ்நாட்டின் எதிர்பார்ப்புகளுக்கு நேரடி பதில் இல்லை எனவும் மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டினார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ் அவர்கள், ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் மற்றும் சிறப்பு மையங்களை (Centres of Excellence) அமைப்பதற்கான கட்டமைப்பு மற்றும் தேர்வு அளவுகோல்களை ஒன்றிய அரசு முடிவு செய்துள்ளதா என்று ஒன்றிய ஆயுஷ் அமைச்சரிடம் விளக்கம் கோரினார். மேலும், தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களிடமிருந்து புதிய ஆயுஷ் நிறுவனங்களை அமைப்பது அல்லது தற்போதுள்ள நிறுவனங்களை வலுப்படுத்துவது தொடர்பாக பெறப்பட்டுள்ள முன்மொழிவுகள், ஆயுஷ் உள்கட்டமைப்பு, ஆராய்ச்சி திறன், சுகாதார சேவைகள் கிடைக்கும் நிலை மற்றும் பிராந்திய சமநிலையை அடி ப்படையாகக் கொண்ட இடத் தேர்வு அளவுகோல்கள், மேலும் இந்தத் திட்டங்களின் கீழ் வழங்கப்படவுள்ள நிதியுதவி, ஆராய்ச்சி வசதிகள், உள்கட்டமைப்பு ஆதரவு, ஒருங்கிணைந்த சுகாதார சேவைகள் மற்றும் அவற்றை செயல்படுத்துவதற்கான காலக்கெடு குறித்தும் விளக்கம் கோரினார்.



ஆயுஷ் அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு:

(அ) முதல் (இ) வரை: தேசிய ஆயுஷ் இயக்கம் (National AYUSH Mission - NAM) என்ற மத்திய ஆதரவு திட்டத்தின் கீழ், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்க ளின் மாநில ஆண்டு செயல் திட்டங்கள் (SAAPs) அடிப்படையில் பெறப்படும் முன்மொழிவுகளின் பேரில் 50/30/10 படுக்கைகள் கொண்ட ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகள் (Integrated AYUSH Hospitals IAHs) அமைப்பதற்காக நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது. NAM வழிகாட்டுதல்களின்படி, மாநில அரசுகள் விரிவான திட்ட அறிக்கை (DPR), நில உரிமை விவரங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்குத் தேவையான நிரந்தர பணியிடங்களை உருவாக்குவதற்கான உறுதிமொழியை SAAP-களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப் பட்டுள் ளது.

மேலும், AYURSWASTHYA என்ற மத்தியத் துறைத் திட்டத்தின் கீழ் செயல்படும் சிறப்பு மைய (Centre of Excellence CoE) கூறின் வாயிலாக, தகுதியுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கு திட்ட வழிகாட்டுதல்களின்படி நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

NAM திட்டத்தின் கீழ், மாநிலங்களிடமிருந்து பெறப்படும் SAAP முன்மொழிவுகளின் அடிப்படையில் தேவைப்படுகின்ற அளவிற்கு நிதி வழங்கப்படுவதாகவும், ஆயுஷ் மருத்துவமனைகள் அமைக்கப்பட வேண்டிய இடங்களை அந்தந்த மாநில அரசுகளே தங்களது தேவைக்கேற்பத் தேர்வு செய்கின்றன என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(ஈ): ஒருங்கிணைந்த ஆயுஷ் மருத்துவமனைகளில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஆயுஷ் மருத்துவ முறைகள் ஒருங்கிணைந்த வகையில் சிகிச்சை சேவைகளை வழங்குகின்றன என்றும், அவற்றின் உள்கட்டமைப்பு மற்றும் மனித வளத்திற்காக நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. தேசிய ஆயுஷ் இயக்கத்தின் செயல்படுத்தல் மாநில அரசுகளின் பொறுப்பில் இருப்பதால், திட்ட ங்களை நிறை வேற்றும் காலக்கெடுவை அந்தந்த மாநில அரசுகளே கண்காணிக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இணைப்பில் (Annexure) வழங்கப்பட்டுள்ள விவரங்களின்படி, 2025-26ஆம் ஆண்டில் AYURSWASTHYA திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள Ayurvedic Trust என்ற சிறப்பு மையத்திற்கு (Centre of Excellence) 73.00 லட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இணைப்பில் தெரிவிக்கப்பட்ட விவர ங்கள் வருமாறு:-

தேனி - சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் - 50 - 733.33 லட்சம் - செயல்பாட்டில் உள்ளது,

திருவண்ணாமலை - சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் - 50 - 733.33 லட்சம் - செயல்பாட்டில் உள்ளது,

புதுக்கோட்டை - ஆயுர்வேதம், ஹோமியோபதி, யுனானி, சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் - 50 - 400.00 லட்சம் - கட்டுமானத்தில் உள்ளது,

நாமக்கல் - ஆயுர்வேதம், ஹோமியோபதி, யுனானி, சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் - 50 - 250.00 லட்சம்- செயல்பாட்டில் உள்ளது,

AAGHIM வளாகம், சென்னை - ஹோமியோபதி ஆயுர்வேதம், தி, யுனானி, சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம் - 50 - 1100.00 லட்சம் - கட்டுமானத்தி ல் உள்ளது,

கோட்டார், நாகர்கோவில் - ஆயுர்வேதம் - 30 - 525.00 லட்சம் - கட்டுமானத்தில் உள்ளது.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் கேள்விக்கு பதிலளிக்கப்பட்டுள்ளது.

### கள்ளக்குறிச்சி தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட மருத்துவமனைகளில்

# அத்தியாவசிய மருந்துகள் - நோயறிதல் வசதிகள் கிடைப்பதன் நிலை என்ன?

## மக்களவையில் தே.மலையரசன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 3 -

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன் மக்களவையில் எழுப்பிய கேள்வி வருமாறு:-

தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் உள்ள அரசு சுகாதார நிறுவனங்களான ஆரம்ப சுகாதார மையங்கள் (PHCs), ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர் (AAMs) மற்றும் மாவட்ட மருத்துவமனைகளில், கள்ளக்குறிச்சி நாடாளுமன்றத் தொகுதி உட்பட, மாவட்ட வாரியாக அத்தியாவசிய மருந்துகள் மற்றும் நோயறிதல் வசதிகள் கிடைப்பதன் தற்போதைய நிலை என்ன?



கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கிராமப்புறங்களில் அத்தியாவசிய மருந்துகளைக் கொள்முதல் செய்வதற்கும், ஆய்வகங்களை வலுப்படுத்துவதற்கும், நோயறிதல் சேவைகளை மேம்படுத்துவதற்கும் பல்வேறு மத்திய சுகாதாரத் திட்டங்களின் கீழ் ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதிகளின் விவரங்கள் என்ன?

மாநிலத்தின் கிரா மப்புற சுகாதார மையங்களில் அத்தியாவசிய மருந்துகள், மருத்துவப் பொருட்கள் மற்றும் நோயறிதல் வசதிகள் கிடைப்பதில் உள்ள பற்றாக்குறைகள், கையிருப்புத் தட்டுப்பாடுகள் அல்லது இடைவெளிகளை ஒன்றிய அரசு மதிப்பிட்டுள்ளதா, அப்படியானால் அதன் விவரங்கள் என்ன?

குறிப்பிட்ட மாநிலத்தின் தொலைதூர மற்றும் பின்தங்கிய பகுதிகளில் உள்ள கிராமப்புற மக்களுக்கு, மலிவு விலையில் மருந்துகள், அத்தியாவசிய நோயறிதல் வசதிகள் மற்றும் தரமான சுகாதார சேவைகள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

### விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க.அரசைக் கண்டித்து தி.மு.க.சார்பில்

# தஞ்சையில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் திரளாக பங்கேற்பீர்!

## பெரம்பலூர் மாவட்டக் கழகத்தினருக்கு வீ.ஜெகதீசன் வேண்டுகோள்!

பெரம்பலூர், ஆக. 3 -

விவசாயிகளை வஞ்சிக்கும் த.வெ.க. அரசைக்கண்டித்து தி.மு.க.சார்பில் தஞ்சையில் இன்று மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

தமிழ்நாடு விவசாயிகளின்நலன்களை புறக்கணித்து,மேகதாது அணை விவகாரத்தில் தமிழகத்தின் உரிமையை கோட்டை விட்ட த.வெ.க. அரசைக் கண்டித்து தஞ்சையில் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடைபெற உள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட கழகத்தினர் திரளாக கலந்து கொள்ள பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கை வருமாறு,

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிக்கையினை ஏற்று,

கழக துணைப் பொதுச் செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா. எம்.பி. வழிகாட்டுதல்படி,

விவசாய கடன் முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டியும்,மேகதாது அணை கட்டுவதை தடுக்க தவறியதைக்கண்டித்தும், டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டியும்,பயிர்க்கடன் தள்ளுபடி மோசடியை கண்டித்தும், மேக தாது பிரச்னையை கைகட்டி வேடிக்கை பார்ப்பது, மேட்டூர் அணையில் இருந்து ஜீன் 12, அன்று தண்ணீர் திறக்காதது, காவிரி பிரச்சினையில் அனைத்து கட்சி கூட்டத்தை கூட்ட மறுப்பது, கர்நாடக முதல்வரை சந்திக்க போவதாக அதிகார மற்ற தகவல்களை உலவ விட்டு ஆழம் பார்ப்பது என தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகம் செய்யும் விளம்பர மாடல் த.வெ.க. அரசைக் கண்டித்து இன்று (03.08.2026) திங்கட்கிழமை காலை பத்து மணிக்கு தஞ்சை பனகல் கட்டிடம் அருகில், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் மாபெரும் கண்டன நடைபெறுகிறது.



இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் கழக முதன்மைச் செயலாளர் கே.என். நேரு வரவேற்புறையாற்றுகிறார்.

மனித நேய மக்கள் கட்சி மாநிலச் செயலாளர் எம். ஹெச். ஜவாஹிருல்லா,ம.ஜ.க. மாநில தலைவர் மு.தமீமுன்அன்சாரி, எஸ்.டி.பி.ஐ. மாநிலச்செயலாளர் நெல்லை முபாரக்,தி.க.மாநில பொதுச் செயலாளர் இரா. ஜெயக்குமார் மற்றும் தே.மு.தி.க., மக்கள் தமிழக நீதி மையம் உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொள்கின்றனர். இதில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை, வார்டு கழகச் செயலாளர்கள், கழக முன்னோடிகள் உள்ளிட்ட அனைவரும் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும் என்று பெரம்பலூர் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# காரைக்குடி மாநகராட்சியில் பெண் கவுன்சிலர்கள் ஆர்ப்பாட்டம்!

சிவகங்கை, ஆக. 3 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகராட்சி ஆகும். இந்த மாநகராட்சியில் 34 வார்டுகள் உள்ளது .இதில் தி.மு.க. அ.தி.மு.க. காங்கிரஸ் மற்றும் சுயேட்சை மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். நேற்று முன் தினம் திடீரென்று மாநகராட்சி வாயிலில் முன்பாக தி.மு.க.அ.தி.மு.க. காங்கிரஸ் மற்றும் சுயேட்சை மாநகராட்சி பெண் கவுன்சிலர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். ஆர்ப்பாட்டத்தில் த.வெ.க. பதவி ஏற்ற நாளில் இருந்து கடந்த மூன்று மாதங்களாக சாலை பராமரிப்பு, மின்விளக்கு ,தூய்மை பணிக்கான நிதியினை வழங்கவில்லை .

இதனால் வார்டுகளில் துப்புரவு மற்றும் சீர மைப்புப் பணிகள் நடைபெறவில்லை. பொதுமக்கள் கவுன்சிலர்களிடம் புகார் கூறுகின்றனர்.

இது குறித்து மாநகராட்சி ஆணையரிடம் கேட்டால் அவர் சரியான பதில் கூறுவதில்லை. எனவே வார்டுகளில் அடிப்படை வசதிகளை உடனடியாக துவங்க கோரியும் இதற்கான நிதியினைஅரசு வழங்க வலியுறுத்தி கோரி நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தினை தொடர்ந்து மாநகராட்சி ஆணையர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண் கவுன்சிலர்களிடம் இது குறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியதன் பேரில் ஆர்ப்பாட்டத்தினை முடித்துக் கொண்டார்கள். திடீரென்று பெண் கவுன்சிலர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியது.